DECEMBER 2024 **U/ID 30624/UCL6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. "பாண்டி நன்னாடுடைத்து நல்ல தமிழ்" - என்று பாடியவர் யார்?

2. எட்டுத்தொகையிலுள்ள அக இலக்கியங்கள் எவையெவை?

3. நற்றிணையிலுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?

4. தொகை என்று ஏன் அழைக்கப்படுகிறது?

5. கலிப்பாவின் ஆறு உறுப்புக்கள் எவையெவை?

6. நெய்தல் கலியைப் பாடிய புலவர் யார்?

7. புறநானூற்றுப் பாக்களின் அடி வரையறையினைக் குறிப்பிடுக.

8. கைக்கிளை என்றால் என்ன?

9. திருச்செந்தூர், இலக்கியங்களின் என்ன பெயராகப் பதிவு செய்யப்படுகின்றது?

10. முல்லைப் பாட்டினை இயற்றியவர் யார்?

11. சேர, சோழரையும் வேளிரையும் வென்றவன் யார்?

12. சாவகர் என்பவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்கான சான்றுகளை இலக்கியங்களின் வழி எடுத்துரைக்க.

14. "நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்" - என்ற பாடலை எழுதி அதன் பொருள் நயங்களைக் குறிப்பிடுக.

15. "நோம் என் நெஞ்சே... நோம் எம் நெஞ்சே" - இப்பாடலின் திணை, துறைகளைச் சுட்டி விளக்குக.

16. ஆயர் இளைஞர் ஏறு தழுவிய வீரக் காட்சியைக் காட்சிப்படுத்துக.

17. "ஒரு தலைப் பதலை தூங்க..." எனத் தொடங்கும் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவை எங்ஙனம் பாடுகிறார்?

18. நெடுஞ்செழியன் பகைவரது நாட்டைக் கைக்கொண்ட வெற்றிகளை எழுதுக.

19. நால்வகைப் படைகளின் இயக்கம் எவ்வாறு இருந்தது? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. நற்றிணையின் பாலைத் திணைப் பாடல்களின் கருத்துக்களைச் சுருக்கி உரைக்க.

21. தோழிக் கூற்றுப் பாடல்களின் கருத்துக்களைக் குறுந்தொகை வழியாக விளக்குக.

22. ஆயர்குலப் பெண்களின் காதல் உணர்வை முல்லைக்கலி கொண்டு ஆய்க.

23. பாரி மகளிரைக் கொண்டுபோம் கபிலர் பறம்பு நோக்கி நின்று சொல்லிய புறநானூற்றுப் பாடலின் நயங்களை ஆய்க.

24. முல்லைப் பாட்டுப் பாக்களின் வழியாக நீவிர் அறிவனவற்றை மதிப்பிடுக.

———————